


ST. ANNE'S GENERALATE
Madavaram | Chennai - 600 060
Tamilnadu | India

NOVEMBER 2023

# AGNL

Volume : 03 Issue : 09


## Monthly Recollection - November 2023
## ALL SAINTS, ALL SOULS' FEASTS ARE THE TIME TO RENEW OUR CONSECRATED LIFE

### Introduction

The first two days of November are there to remind us of so much of this Christian tradition. We fondly remember the Communion of Saints and our beloved dead. The Church reminds us of the three phases of the Church by celebrating these two feasts. These (three phases) are called

- the Church Militant (the Pilgrim Church on earth
- the Church Suffering (the souls in purgatory) and
- the Church Triumphant (the souls in heaven).

### What does it mean to celebrate the All Saints' Day?

All Saints' Day celebrates the solemnity of all the saints in Heaven, both saints recognized by the Church as holy men and women *and* those who remain unknown. We express our belief in this Doctrine each time we say the Apostles' Creed - 'the communion of saints'. At mass when we sing "holy, holy, holy…", we not only think of the saints, but we do what they do. It is good for us to let ourselves be provoked by the saints. Like everyone, they breathed the polluted air of evil in the world, yet they never lost sight of Jesus' footsteps along the way. Let us have a great longing to be like them.



### What does it mean to celebrate the All Souls' Day?

In the Early Church, a chair was left vacant at table, along with a plate and tableware, to remind the family to pray for the repose of the souls of their deceased loved ones. Each year we look forward to celebrating All Souls' Day, the one day of the year we commemorate the importance of the faithfully departed. It is also a day when we are encouraged to visit the graves of our beloved, gain indulgences to be applied to their souls, and have Masses offered for the repose of their souls and also to pray for the souls in purgatory. Whenever we visit a cemetery, we see a field of hope! Hope that one day these mortal bodies will be reunited with the spiritual body at the second coming. During this month of November, we remember our beloved dead with appropriate religious remembrances: "Eternal rest grant unto them, O Lord, and let perpetual light shine upon them. May they rest in peace. Amen."

### Life of witness and holiness is essential amidst the challenging scenario in India

There have been 525 attacks against Christians in India in the first eight months of 2023. This year will likely excede the record violence set in 2022 and in 2021. The Christians along with other minority communities are

facing serious challenges in the last one and half decade. The challenges have become more severe with the raise of fascist forces in India. The consecrated life is facing specific challenges these days in India. If we respond to the challenges, we can change what is problematic and in crisis, into occasions of growth, and into a new stage. It is to this that we are called. We need to become leaven that ferments the dough of the consecrated life and to become a gift and a living and prophetic presence of the Spirit.(Mt 13: 33) We cannot look back but forward, and offer alternatives. In this regard, the consecrated persons are called to present a life of holiness and prophetic witness through our being and doing.

### We are destined to become saints

God wants us to become saints. That is why God created each of us. A door is opened on the road to sainthood. We should not be discouraged to travel on this road. God gives us the grace to do so. It is by living with love and offering prophetic witness in our daily tasks that we are called to become saints. Let us ask ourselves what side we are on that of heaven or that of the earth. Do we live for the lord or for ourselves, for eternal happiness or for some fulfilment now? We are united not only with the saints of the calendar but also with our 'next door' saints - our relatives, sisters in the Congregation, friends, people in the locality, parish and in the mission station. Let us all implore God to grant us the grace to become a saint in our circumstances of life and to be a beacon of God's love for humanity.



Mother Teresa told her admirers that instead of coming to Calcutta they should stay in their own homes and towns and do small things with great love. And St. Francis said to his brothers at the end of his life: “I have done what is mine to do. May Christ show you the work that is yours. Yes, God invites us to be holy as He is holy.

**Reading**: Matthew 5:1-12



### Beatitudes, the path to holiness in daily life

Can we live out the Beatitudes in our daily lives? Yes, they are just as relevant today as they were 2,000 years ago. They apply to every area of life and can revolutionize our lives. They are a reminder to live out our faith in a way that is kind, compassionate, and forgiving. Living the Beatitudes is a lifelong task because the Beatitudes turn upside down the values of the world. The world sets up the rich to be first; Jesus puts the poor on top of the world. The world tells us to seek happiness at all costs; Jesus saw happiness in mourning. The Beatitudes are the eight revolutionary blessings that will change our lives. All of us are called to be poor in spirit, to be completely dependent on God, to share in other people's mourning, to react to others in the spirit of humility, to hunger and thirst for righteousness, to see and act with mercy, to keep hearts free to love, to sow peace around us, and finally to be faithful to the Gospel even in the face of persecution. Let us practice the Beatitudes, the revolutionary blessings, for our happy and holy life.

### How to lead our consecrated life today?

We need to give the following such expressions strongly today: impassioned following of Christ, radical discipleship, evangelical radicalness, witnessing to the primacy of God, evangelical spirituality, intense prayer, apostolic dynamism, missionary enthusiasm, lively communities, simple and open communities

which are missionary and have an intense spiritual life, option for the poor, and intense fervour. Our communities and sisters should be moved by fervour, fraternity, and missionary dynamism. Our life requires quality. We are expected to be authentic in our religious calling, living and identity. We need to replace the lapsed structures, overcome disenchantment, recognize new meanings, return to the Word of God and the foundational charism, respond to the signs of the times, and encounter the poor and the needy. We are well aware that our life must be reinvented starting from a renewed experience that is mystical, spiritual and charismatic.

### Group discussion

- Let us pray Psalm 130 for each departed sister of our Congregation every day.
- We can also make a list of our departed family members, friends, and well-wishers and pray for them every day.
- We can visit the nearby cemetery to pray for all the departed and forgotten souls.
- Identify a Saint who inspires you. Draw meaning from his/her life or words. Pray to him/her every day. Let he/she leads you to holiness.
- Let us pray for the Cause of Canonization to our beloved Mother Foundress Thatipathri Gnanamma every day, especially in this month.

### Let us recite this prayer often this month

"Eternal rest grant unto them, O Lord, and let perpetual light shine upon them. May their souls and the souls of all the faithful departed, through the mercy of God, rest in peace. Amen. Like the seed buried in the ground, you have produced the harvest of eternal life for us; make us always dead to sin and alive to God".

"Lord, as the saints in Heaven adore You for eternity, I beg for their intercession. Saints of God, please come to my aid. Pray for me and bring to me the grace I need to live a holy life in imitation of your own lives. All saints of God, pray for us. Amen".

### Let us pray this Litany on the day of recollection this month



Lord, have mercy on us.
Christ, have mercy on us.
Lord, have mercy on us.
Christ, hear us.
Christ, graciously hear us.
God, the Father of Heaven, have mercy on us.
God the Son, redeemer of the world, have mercy on us.
God the Holy Ghost, have mercy on us.
Holy Trinity, one God, have mercy on us.

Holy Mary, pray for us.
Holy Mother of God, pray for us.
Holy Virgin of Virgins, pray for us.
St.Michael, pray for us.
St.Gabriel, pray for us.
St.Raphael, pray for us.
All you holy angels and archangels, pray for us.
All you holy orders of blessed spirits, pray for us.

St.John the Baptist, pray for us.
St.Joseph, pray for us.
All you holy patriarchs and prophets, pray for us.
St.Peter, pray for us.
St.Paul, pray for us.
St.Andrew, pray for us.
St.James, pray for us.
St.John, pray for us.
St.Thomas, pray for us.
St.Philip, pray for us.
St.Bartholomew, pray for us.
St.Matthew, pray for us.
St.Simon, pray for us.
St.Thaddeus, pray for us.
St.Barnabas, pray for us.
St.Luke, pray for us.
St.Mark, pray for us.
All you holy apostles and evangelist, pray for us.
All you holy disciples of our lord, pray for us.
All you holy innocents, pray for us.
St.Stephen, pray for us.
St.Lawrence, pray for us.
St.Vincent, pray for us.
Sts.Fabian and Sebastian, pray for us.
Sts.John and Paul, pray for us.
Sts.Cosmos and Damian, pray for us.
Sts.Gervase and Protase, pray for us.
All you holy martyrs, pray for us.
St.Sylvester, pray for us.
St.Gregory, pray for us.
St.Ambrose, pray for us.
St.Augustine, pray for us.
St.Jerome, pray for us.
St.Martin, pray for us.
St.Nicholas, pray for us.
All you holy bishops and confessors, pray for us.
All you holy doctors, pray for us.
St.Anthony, pray for us.
St.Benedict, pray for us.
St.Bernard, pray for us.
St.Dominic, pray for us.
St.Francis, pray for us.
All you holy priest and levites, pray for us.
All you holy monks and hermits, pray for us.

St.Mary Magdalen, pray for us.
St.Agatha, pray for us.
St.Lucy, pray for us.
St.Agnes, pray for us.
St.Cecilia, pray for us.
St.Catherine, pray for us.
St.Anastasia, pray for us.
All you holy virgins and widows, pray for us.
All you men and women, saints of god, pray for us.

Be merciful, spare us, O Lord!
Be merciful, graciously hear us, O Lord!

From all evil, O Lord, deliver us.
From all sin, O Lord, deliver us.
From thy wrath, O Lord, deliver us.
From a sudden and unprovided death, O Lord, deliver us.
From the deceits of the devil, O Lord, deliver us.
From anger, hatred, and all ill will, O Lord, deliver us.
From the spirit of fornication, O Lord, deliver us.
From lightning and tempest, O Lord, deliver us.
From the scourge of earthquake, O Lord, deliver us.
From pestilence, famine, and war, O Lord, deliver us.
From everlasting death, O Lord, deliver us.
Through the mystery of thy holy incarnation, O Lord, deliver us.
Through thy coming, O Lord, deliver us.
Through thy nativity, O Lord, deliver us.
Through thy baptism and holy fasting, O Lord, deliver us.
Through thy cross and passion, O Lord, deliver us.
Through thy death and burial, O Lord, deliver us.
Through thy holy resurrection, O Lord, deliver us.
Through thine admirable ascension, O Lord, deliver us.
Through the coming of the holy ghost, the paraclete, O Lord, deliver us.

In the day of judgment, we sinners beseech Thee, hear us.
That thou wouldst spare us, we beseech Thee, hear us.
That thou wouldst pardon us, we beseech Thee, hear us.
That thou wouldst vouchsafe to bring us to true penance, we Beseech Thee hear us.
That thou wouldst vouchsafe to govern and preserve thy holy church....we beseech Thee, hear us.
That thou wouldst vouchsafe to preserve our apostolic prelate and all ecclesiastical orders in holy religion…we beseech Thee, hear us.
That thou wouldst vouchsafe to humble the enemies of thy holy church, we beseech Thee, hear us.
That thou wouldst vouch safe to give peace and true concord to christian kings and princes, we beseech Thee, hear us.
That thou wouldst vouchsafe to grant peace and unity to all christian people, we beseech Thee, hear us.

That thou wouldst vouchsafe to bring back to the unity of the church all those who have strayed away, and lead to the light of the Gospel all unbelievers, we beseech Thee, hear us.
That thou wouldst vouchsafe to confirm and preserve us thy holy service, we beseech Thee, hear us.
That thou wouldst lift up our minds to heavenly desires, we beseech Thee, hear us.
That thou wouldst render eternal blessings to all our benefactors, we beseech Thee, hear us.
That thou wouldst deliver our souls and those of our brethren, relative, and benefactors from eternal damnation, we beseech Thee, hear us.
That thou wouldst vouchsafe to give and preserve the fruits of the earth, we beseech Thee, hear us.
That thou wouldst vouchsafe to give eternal rest to all the faithful departed, we beseech Thee, hear us.
That thou wouldst vouchsafe graciously to hear us, we beseech Thee, hear us.

Son of God, we beseech Thee, hear us.
Lamb of God, who takes away the sins of the world, spare us, O Lord.
Lamb of God, who takes away the sins of the world, graciously hear us, O Lord.
Lamb of God, who takes away the sins of the world, have mercy on us.
Christ, hear us.......
Christ, graciously hear us.......
Lord, have mercy on us.......
Christ, have mercy on us.......
Lord, have mercy on us.......

## மாத ஆய்வுநாள் - நவம்பர் 2023

## அர்ப்பண வாழ்வை புதுப்பிக்க அழைக்கும் அனைத்துப்புனிதர்களும், ஆன்மாக்களும்



நவம்பர் மாதத்தின் முதல் இரண்டு நாட்கள் நமக்கு கிறித்தவ பாரம்பரியம் மற்றும் நம்பிக்கையை நினைவுவூட்டுகின்றன. அனைத்து புனிதர்கள் மற்றும் ஆன்மாக்களின் விழாவினை சிறப்பிப்பதன் வழியாக திருஅவையின் கீழ்கண்ட மூன்று நிலைகள் நமக்கு உணர்த்தப்படுகின்றன:

01.போராடும் திருஅவை (உலகில் பயணம் செய்யும் திருஅவை)
02.துன்புறும் திருஅவை (உத்தரிக்கிர ஸ்தலத்தில் துன்புறும் திருஅவை)
03.வெற்றியுறும் திருஅவை (விண்ணிலே மாட்சியுடன் வீற்றிருக்கும் திருஅவை).

### *அனைத்துப்புனிதர்களின் தினம் சிறப்பிப்பதன் நோக்கம்*

திருஅவையால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்படாத விண்ணகத்திலுள்ள அனைத்துப் புனிதர்களையும் நவம்பர் முதல் நாள் திருஅவை நினைவு கூர்ந்து சிறப்பிக்கிறது. ஒவ்வொரு முறையும் நம்பிக்கை மன்றாட்டினை செபிக்கும் பொழுது, 'புனிதர்களின் சமூக உறவு' என்ற கிறித்தவ நம்பிக்கை கோட்பாட்டினை நாம் புதுப்பித்துக் கொள்கிறோம். மேலும் திருப்பலியில் தூயவர், தூயவர், தூயவர் என பண்ணிசைக்கும் பொழுது, அனைத்துப்புனிதர்களையம் நினைவு கூர்வதோடு, நாமும் தூயவர்களாக வாழ

அழைக்கப்படுகிறோம். இப்புனிதர்களின் நினைவு நம்மை புனித வாழ்விற்கு இட்டுச்செல்ல ஆசிக்கிறது. இப்புனிதர்கள் அனைவரும் நம்மை போல் தூய்மையற்ற, மாசடைந்த உலகில் வாழ்ந்தவர்கள். எனினும் அவர்கள் தம் பார்வையை இறைமகன் இயேசுவில் பதித்தவர்கள். தங்கள் பாதங்களை இயேசுவின் வழித்தடத்தில் நடத்தியவர்கள். நாமும் இவர்களைப்போல் வாழ முயற்சிக்கவே திருஅவை இவர்களின் நினைவை விழாவாக சிறப்பிக்கிறது.

### அனைத்து ஆன்மாக்களின் நினைவு தினம் கொண்டாடப்படுவதன் நோக்கம்

கிறித்தவர்கள் தம் குடும்பங்களில் இறந்தவர்களை நினைவு கூர்ந்து செபிப்பதை தங்களது கடமையும், நம்பிக்கையுமாக கருதுகின்றனர். ஆதிக்கிறிஸ்தவர்கள் இந்நாட்களில் தம் இல்லங்களில் உணவறையில் ஒரு காலி நாற்காலி, உணவு தட்டு மற்றும் பிற பொருட்களை வைப்பர். இது தம் இல்லத்தில் இறந்தவர்களை நினைவு கூர்ந்து செபிக்க வேண்டும் என்பதன் அடையாளமாக அமைந்தது. இன்றும் கிறித்தவ சமூகம் நவம்பர் மாதத்தில் இந்நாளுக்காக ஆவலுடன் எதிர்பார்த்து, அன்று கல்லறைகளுக்குச் சென்று, அவற்றை தூய்மைப்படுத்தி, அழகுபடுத்தி, தாம் அன்பு செய்த உறவினர்களை நினைத்து, அவர்களின் ஆன்மா விண்ணக பேரின்பம் அடைய செபிக்கிறது. கல்லறையை சந்திக்கும் பொழுதெல்லாம் நமது விசுவாசம் ஆழப்படுகிறது, உறுதியடைகிறது, நம்பிக்கை நம்மில் துளிர்விடுகிறது, 'நம்பிக்கையாளர்களுக்கு இம்மண்ணக உறைவிடம் மறைந்தாலும், விண்ணகத்திலே நித்திய வீடு ஆயத்தமாய் உள்ளது' என்ற நமது விசுவாசத்தையும் நாம் புதுப்பித்துக்கொள்கிறோம். எனவே தான் இந்த நவம்பர் மாதத்தை நாம் வெறுமனே கடந்து செல்லாமல் மரணமும், உயிர்ப்பும் நமக்கு கற்றுத்தரும் பாடங்களை கவனமாக கற்கிறோம். நமது சபையிலும், குடும்பங்களிலும் இறந்த அனைவரையும் நினைவு கூர்ந்து அவர்களுக்காக சிறப்பாக செபிக்கிறோம். நிலையற்ற இம்மண்ணக வாழ்வையும், நிலையான விண்ணக வாழ்வையும் புரிந்துக் கொள்ள முயற்சிக்கிறோம். இதனை நினைவுபடுத்தவே வருடம் ஒருமுறை, நவம்பர் மாதத்தில் நம்மை புனிதப்பாதைக்கு திருஅவை அழைக்கிறது.

### புனிதம் நிறைந்த சாட்சி பகரும் வாழ்வு இந்தியச்சூழலில் இன்றைய முதன்மையானத்தேவைகள்

பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவில் 2023ஆம் ஆண்டு துவக்கத்திலிருந்து இன்று வரை கிறித்தவர்களுக்கு எதிராக 525 வன்முறைத்தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு செய்யப்படாதவைகள் கணக்கிலடங்காதவைகள். கடந்த 2021, 2022 ஆண்டுகளில் நடைபெற்ற தாக்குதல்களைவிட இது மிகவும் அதிகம் என்றும் கூறப்படுகிறது. கடந்த 15 ஆண்டுகளில் இவ்வாறாக கிறித்தவர்கள் மற்றும் சிறுபான்மையினர் இவ்வித வன்முறைத்தாக்குதல்களுக்கு உள்ளாகி வருகின்றனர். இந்தியாவில் பாசிசம் வலுபெற, வலுபெற, இவ்வகையான தாக்குதல்களும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. இச்சூழலில் துறவற வாழ்வு பல சவால்களை சந்தித்து வருகிறது. இதற்கு நமது புனிதமான, எடுத்துக்காட்டான, வலிமையான வாழ்வால் பதிலளிக்கும் பொழுது தான், இந்த இக்கட்டானச்சூழல் மாற்றம் பெறும். இதற்காகத்தான் நாம் அழைக்கப்பட்டுள்ளோம். விவிலியத்தில் குறிப்பிட்டது போல், நாம் ஒவ்வொருவரும் புளிக்காரமாய் செயல்பட்டு துறவற வாழ்வு என்ற மாவினை உருமாற்றி, பதப்படுத்தி, பயன்பாடு மிக்கதாய் மாற்றி, இறைவனுக்கு தான்மையுடைய, வாழும், செயலாற்றும், தூயஆவியின் பிரசன்னமாகத் திகழும் துறவற வாழ்வாக மாற்றி அமைக்க வேண்டும்.(மத் 13:33) நாம் பின்னோக்கிப்பாராமல், இறைமகன் இயேசுவின் மீது நமது பார்வையை பதித்தவர்களாய், காலத்தின் சவால்களுக்கு நமது சாட்சியான மற்றும் புனிதமான வாழ்வு முறையால் பதிலளிப்போம்.



### புனிதர்களாக மாறவே அழைக்கப்பட்டுள்ளோம்

நாம் புனிதர்களாக வாழவே, மாறவே அழைக்கப்பட்டுள்ளோம் என்பதே நிதர்சன உண்மை. இதற்காகவே நாம் படைக்கப்பட்டுள்ளோம். புனித வாழ்விற்கான பாதை நம்முன் விரிந்துள்ளது, கதவும் திறக்கப்பட்டுள்ளது. மனந்தளராமல் இப்பாதையில் பயணிக்க முன்வருவோம். இதற்கான அருளை இறைவன் நமக்கு அளித்துள்ளார். இந்த வாழ்க்கைப்பயணித்தில் நம்மையே நாம் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி இது தான்: நாம் யார் பக்கம்

சார்ந்துள்ளோம்? நாம் விண்ணகம் நோக்கிய பயணத்தில் உள்ளோமா? அல்லது இந்த உலகம், அதன் தேடல்கள் ஆகியவற்றில் மூழ்கியுள்ளோமா? நாம் இறைவனுக்காக வாழ்கிறோமா? அல்லது நமது தேவைகளை நிறைவு செய்வதற்காக வாழ்கிறோமா? திருஅவையில் புனிதர்களின் பட்டியலில் உள்ள புனிதர்களிடம் மட்டுமா அல்லது திருத்தந்தை குறிப்பிடுவதுபோல் 'அடுத்த கதவில்' வாழும் நம்முடன் வாழும் சகோதரிகள், சபை சகோதரிகள், நண்பர்கள், நம் உறவினர்கள், ஊரில் வாழ்பவர்கள், சமகாலத்தில் வாழ்பவர்கள் இவர்களின் புனித, தூய்மையான, தன்னலமற்ற வாழ்வை அங்கீகரித்து, பாராட்டி, அதனை பின்பற்ற முனைந்துள்ளோமா?

நாம் வாழும் இக்காலகட்டத்தில், இச்சவாலானச்சூழலில், இவ்வுலகில், இறையன்பின் அடையாளமாய் திகழ்வோம். கொல்கத்தாவின் அன்னை தெரசா தன்னை சந்திக்க வருபவர்களிடம் 'நீங்கள் உங்கள் ஊர்களில், நகரங்களில் உள்ளவர்களுக்கு ஆற்றும் எந்த சிறுசெயலையும் அதிக அன்புடன் செய்யுங்கள். இதுவே புனிதத்தின் வழி' என்று கூறுவார். நம் சபையின் துணை பாதுகாவலர் புனித பிரான்சீஸ் அசிசியார் தன் வாழ்வின் இறுதியில் தனது சகோதர்களிடம் 'எனது பங்கை நான் ஆற்றியுள்ளேன் எல்லாம் வல்ல இறைவன் நீங்கள் ஆற்ற வேண்டிய பணியினை உங்களுக்கு உணர்த்துவாராக' என கூறியுள்ளார். இறைவன் தன்னைப்போல் நாமும் புனிதர்களாக வாழ அழைக்கிறார்.

*இறைவார்த்தை:* மத்தேயு 5:1-12

### *அன்றாட வாழ்வில் புனிதத்தின் பாதையைக் காட்டும் மலைப்பொழிவு*

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இறைமகன் இயேசு கிறிஸ்துவால் அளிக்கப்பட்ட மலைப்பொழிவு இன்றும், இக்காலகட்டத்திலும் பொருத்தமானதாகவும், வாழ்வின் எல்லா நிலைகளுக்கும் பதிலளிப்பதாகவும், மறுமலர்ச்சி ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது: கிறித்தவ வாழ்வு முறையான இரக்கம், மன்னிப்பு, அன்பு, நீதி போன்ற விழுமியங்களை நிலைநாட்டுவதாக அமைந்துள்ளது. இறைவன் அருளிய இந்த மலைப்பொழிவை நமதாக்கி கொள்ள வாழ்க்கை முழுவதும் நாம் முயற்சிக்க வேண்டும். ஏனெனில் இவ்வுலக போக்கிற்கு முற்றிலும் முரண்பட்டதாக மலைப்பொழிவு அமைந்துள்ளது. செல்வம் மற்றும் செல்வந்தவர்களை உலகம் முன்னிறுத்துகிறது - மலைப்பொழிவோ ஏழ்மை, ஏழைகளை முன்னிறுத்துகிறது. மகிழ்ச்சிக்காக எதையும் விலையாக தர உலகம் முன்வருகிறது - இயேசுவோ துன்பத்தில் மகிழ்ச்சியை காண கற்பிக்கிறார். நாம் தூய உள்ளத்துடன், இறைவனை முழுமையாய் சார்ந்து, பிறரின் துன்பங்களில் தோள் கொடுத்து, பணிவுடன் பிறருடன் உறவாடி, நீதிக்கும், உண்மைக்கும் குரல் கொடுத்து, கருணையும், அன்பும் கொண்டு அமைதியை விதைத்து, துன்பத்தின் மத்தியிலும் நற்செய்தியை உறுதியாய் பின்பற்றி வாழ மலைப்பொழிவு நம்மை அழைக்கிறது. இறைவன் அருளிய இப்புரட்சிகரமான எட்டு வாழ்த்துகளை, ஆசீர்வாதங்களை வாழ்வாக்கி புனிதப்பாதையில் பயணிப்போம்.

### *துறவற வாழ்வை எப்படி வடிவமைக்க வேண்டும்?*

புனிதத்தின் பாதையில் பயணிக்க வேண்டும் நமது வாழ்வுமுறை கொண்டிருக்க வேண்டியவைகள்: இறைமகன் இயேவை உணர்வுப்பூர்வமாக பின்பற்றல்: உண்மையான சீடத்துவம்: உறுதியான அப்போஸ்தலிக்க ஆர்வம்: கிறிஸ்துவே என் வாழ்வின் முதன்மை என்பதை வாழ்வில் வெளிப்படுத்துதல்: அப்போஸ்தலிக்க ஆன்மீகம்: ஆழமான செபவாழ்வு (intense prayer): அப்போஸ்தலிக்க இயங்குத்தன்மை: மகிழ்ச்சியான, நட்புறவு கொண்ட, மறைபரப்புபணிக்கான இயங்குத்தன்மை உடைய, செயலாற்றும், எளிமையான, யதார்த்தமான, சேவையாற்றும், அடர்த்தியான ஆன்மீகமும் தரமான வாழ்வுமுறையும் கொண்ட துறவற குழுமம்.

துறவற அழைத்தலுக்கு உண்மையுள்ளவர்களாக, அதன் அடையாளத்தை வெளிக்கொணர நாம் அழைக்கப்பட்டுள்ளோம். நமது தவறுகளைத் திருத்திக் கொண்டு, ஏமாற்றம் - தோல்விகளிலிருந்து வெளிவந்து, வாழ்விற்கான புதுஅர்த்தங்களை கண்டுணர்ந்து, இறைவார்த்தையில் வேரூன்றி, சபையின் துவக்ககால நோக்கம் மற்றும் தனிவரத்தில் நிலைத்திருந்து, இன்றையக்காலச்சூழலுக்கு தக்க பதிலளித்து, ஏழ்மையிலும் தேவையிலும் இருப்போரைச் சந்தித்து, நிறைவான துறவற வாழ்வினை வடிவமைத்துக் கொள்வோம். ஆழ்ந்த இறையனுபவம், அடர்த்தியான ஆன்மீகம் மற்றும் கொள்கைப்பிடிப்புடன் கூடிய செயலாற்றல் என்ற ஊற்றினிலே மீண்டும், மீண்டும் மூழ்கி நமது துறவற வாழ்வை காலந்தோறும் வடிவமைத்து கொள்வோம்.

### குழுமப்பகிர்விற்கு

- சபையின் தகவல் ஏட்டை (Directory) பயன்படுத்தி, நம்மை விட்டு பிரிந்த ஒவ்வொரு சகோதரிக்கும் திருப்பாடல் 130-ஐ செபித்து, 'நித்திய இளைப்பாற்றியை இவர்களுக்கு அளித்தருளும்' என்ற செபத்தை மூன்று முறை சொல்வோம்.
- இறந்த நமது குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், உபகாரிகளின் பெயர்களை பட்டியலிட்டு அவர்களுக்காக செபிப்போம்.
- அருகாமையில் உள்ள கல்லறைக்குச் சென்று அங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ள அனைத்து ஆன்மாக்களுக்காக, மேலும் யாரும் நினையாத ஆன்மாக்களுக்காகவும் செபமாலை செபிப்போம்.
- 'என்னை கவர்ந்த புனிதர்' - இம்மாதத்தில் ஒரு புனிதரை தேர்ந்தெடுத்து, அவரின் வாழ்க்கை வரலாற்றை வாசித்து, அவர் வாழ்வு புனிதமாகிய விதத்தை உற்று நோக்குவோம்.
- நம் சபை நிறுவுனர் இறைஊழியர் அன்னை தாட்டிபத்திரி ஞானம்மா புனிதநிலைக்கு திருஅவையால் உயர்த்தப்பட தனிப்பட்ட முறையிலும், குழுமமாகவும் செபிப்போம்.

### இந்த நவம்பர் மாதம் இந்த செபங்களை அடிக்கடி செபிப்போம்

'நித்திய இளைப்பாற்றியை அவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே. முடிவில்லாத ஒளி அவர்கள் மீது ஒளிர்வதாக. இறந்த அவர்களின் ஆன்மாக்கள், மற்றும் இறந்த அனைத்து விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தால் நித்திய இளைப்பாற்றி அடைவதாக. ஆமென். நிலத்தில் புதைந்த விதைப்போல, எங்களுக்காக முடிவில்லாத வாழ்வின் அறுவடையை உண்டாக்கினீர். எங்களை எப்பொழுதும் பாவத்திற்கு இறந்தவர்களாக, இறைவனில் உயிருள்ளவர்களாக ஆக்கியருளும்.'

'இறைவா, விண்ணகத்திலுள்ள புனிதர்கள் உம்மை முடிவில்லாத காலமும் ஆராதிப்பதுப்போல, நான் அவர்களுடைய பரிந்துரையை வேண்டிக்கொள்கிறேன். இறைவனின் புனிதர்களே, என் உதவிக்கு வருமாறு உங்களை மன்றாடுகிறேன். எனக்காக செபித்துக்கொள்ளவும். உங்களது சொந்த வாழ்க்கையைப் பின்பற்றி, நான் புனிதமாக வாழத்தேவையான அருளை அளித்தருளும். இறைவனின் புனிதர்களே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள். ஆமென்.'

### நவம்பர் மாதம் ஆய்வுநாள் அன்று அனைத்துப்புனிதர்களை நோக்கி செபிப்போம்!



ஆண்டவரே, எங்கள் மீது இரக்கமாயிரும்.
கிறிஸ்துவே, எங்கள் மீது இரக்கமாயிரும்.
ஆண்டவரே, எங்கள் மீது இரக்கமாயிரும்.
கிறிஸ்துவே, எங்களுக்கு செவிசாய்த்தருளும்.
கிறிஸ்துவே, எங்களுக்கு தயவாய் செவிசாய்த்தருளும்.

விண்ணகத்தில் இருக்கிற தந்தையாம் இறைவா,
எங்கள் மீது இரக்கமாயிரும்.
இறைமகனும், உலகின் மீட்பரும் ஆனவரே,
எங்கள் மீது இரக்கமாயிரும்.
தூயஆவியான இறைவா, எங்கள் மீது இரக்கமாயிரும்.
தூய மூவொரு இறைவா, எங்கள் மீது இரக்கமாயிரும்.

தூய மரியாளே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
இறைவனின் அன்னையே, ............
கன்னியர்களில் தூய கன்னிகையே, ............
தூய மைக்கேலே, ............
தூய கபிரியேலே, ............
தூய இர∴பேலே, ............
தூய தூதர்களே, அதிதூதர்களே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

ஆசீர்வதிக்கப்பட்ட ஆவிகளின் அனைத்து தூயக்கட்டளைகளே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.
தூய திருமுழுக்கு யோவானே, …………
தூய வளனாரே, …………
தூய மூதாதையர்களே, இறைவாக்கினர்களே, …………
தூய பேதுருவே, …………
தூய பவுலடியாரே, …………
தூய அந்திரேயரே …………
தூய யாகப்பரே, …………
தூய யோவானே, …………
தூய தோமையாரே, …………
தூய பிலிப்புவே, …………
தூய பார்த்தலோமேயுவே, …………
தூய மத்தேயுவே, …………
தூய சிமியோனே, …………
தூய ததேயுஸ்யே, …………

தூய பர்னபாசே, ……………
தூய லூக்காவே, …………
தூய மார்க்கே, …………
தூய அப்போஸ்தலர்களே, நற்செய்தியாளர்களே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.
நமதாண்டவராம் இயேசு கிறிஸ்துவின் புனித சீடர்களே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.
மாசற்ற புனித ஆன்மாக்களே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.
தூய முடியப்பரே, …………
தூய இலாரன்ஸே, …………
தூய வின்சென்டே, …………
தூய ∴பேபியன் மற்றும் செபஸ்தியாரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.
தூய யோவான் மற்றும் பவுல் அடியாரே, “
தூய காஸ்மோஸ் மற்றும் டாமியானே, “
தூய கெர்வாஸ் மற்றும் புரோட்டாசே, “
தூய வேதசாட்சிகளே, “
தூய சில்வெஸ்டரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
தூய கிரகோரியாரே, ……………
தூய அம்புரோசியாரே, …………
தூய அகஸ்தினாரே, …………
தூய ஜெரோமே, …………
தூய மார்ட்டினே, …………
தூய நிக்கோலசே, ……………
தூய ஆயர்களே மற்றும் ஆலோசகர்களே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.
தூய மறைவல்லுனர்களே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.
தூய அந்தோணியாரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
தூய பெனடிக்டே, …………
தூய பெர்னாந்துவே, …………

தூய டாமினிக்கே, …………
தூய பிரான்சீஸே, …………
தூய குருக்களே, துறவிகளே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.
தூய மரியமதனோளே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
தூய அகத்தாவே, ………
தூய லூசியாவே, ………
தூய ஆக்னசே, …………
தூய சிசிலியாவே, ………
தூய கேத்தரினே, …………
தூய அனஸ்தாசியாவே, ………
தூய கன்னியர்களே, விதவையர்களே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.
ஆண்களே, பெண்களே, இறைவனின் புனிதர்களே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

எங்கள் மீது இரக்கமாயிருந்து காப்பாற்றும் ஆண்டவரே.
எங்கள் மீது இரக்கமாயிருந்து கருணையுடன் செவிசாய்த்தருளும் ஆண்டவரே.

எல்லா தீமைகளிலிருந்தும், ஆண்டவரே எங்களை விடுவித்தருளும்.
எல்லா பாவங்களிலிருந்தும், …………
உமது கோபத்திலிருந்து, …………
திடீர் மற்றும் சடுதி மரணத்திலிருந்து, …………
சாத்தானின் வஞ்சக சோதனைகளிலிருந்து, …………
கோபம், வெறுப்பு மற்றும் எல்லா தீய எண்ணங்களிலிருந்தும், …………
வேசித்தனத்தின் பிடியிலிருந்து, …………
மின்னல் மற்றும் சூறாவளியிலிருந்து, …………
பூகம்பத்தின் கொடுமையிலிருந்து, …………
கொள்ளை நோய், பஞ்சம், போர் ஆகியவற்றிலிருந்து, …………
நித்திய மரணத்திலிருந்து, …………
உமது புனித மனுஅவதாரத்தின் மூலமாக, …………
உமது திருவருகையின் மூலம், ……………
உமது பிறப்பின் மூலம், …………
உமது திருமுழுக்கு மற்றும் பரிசுத்த நோன்பின் மூலம், …………
உமது சிலுவை மற்றும் துன்பங்களின் மூலம், …………
உமது மரணம் மற்றும் அடக்கத்தின் மூலம், …………
உமது பரிசுத்த உயிர்த்தெழுதலின் மூலம், …………
உமது போற்றத்தக்க விண்ணேற்றத்தின் மூலம், …………
விண்ணகத்திலிருந்து பரிசுத்த ஆவியின் வருகையின் மூலம், …………

இறுதித்தீர்ப்பு நாளில், பாவிகளான உம்மை மன்றாடுகிறோம், எங்களுக்கு செவிசாய்த்தருளும்.
எங்களைக் காப்பாற்றும் என்று உம்மை மன்றாடுகிறோம், எங்களுக்கு செவிசாய்த்தருளும்.
நீர் எங்களை மன்னிப்பீர் என்று உம்மை மன்றாடுகிறோம், எங்களுக்கு செவிசாய்த்தருளும்.

உண்மையான தவத்திற்கு எம்மை கொண்டு வருவதற்கு நீர் உறுதியளிக்க உம்மை கேட்கிறோம், எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

உம்முடைய பரிசுத்த ஆலயத்தை நிர்வகிக்கவும், பாதுகாக்கவும் நீர் உறுதியளிக்க உம்மை கேட்கிறோம், ...

திருச்சபையின் தலைவர்களையும், அதன் கட்டளைகளையும் பாதுகாக்க நீர் உறுதியளிக்க உம்மை கேட்கிறோம், …………

பரிசுத்த தேவாலயத்தின் எதிரிகளை முறியடிக்க நீர் உறுதியளிக்க உம்மை கேட்கிறோம், ……………

கிறித்தவ அரசர்கள், இளவரசர்களுக்கு அமைதி, ஒற்றுமையை வழங்குவதற்கு நீர் உறுதியளிக்க உம்மை கேட்கிறோம், ………

அனைத்து கிறித்தவ மக்களுக்கும் அமைதி, ஒற்றுமை வழங்குவதற்கு நீர் உறுதியளிக்க உம்மை கேட்கிறோம், ……………

வழித்தவறிச் சென்ற அனைவரையும் திருச்சபையின் ஐக்கியத்திற்குத் திரும்பக் கொண்டுவர, விசுவாசமற்றவர்கள் அனைவரையும் நற்செய்தியின் வெளிச்சத்திற்கு அழைத்துச் செல்ல நீர் உறுதியளிக்க உம்மை கேட்கிறோம், ………...

உமது புனிதமான சேவையை உறுதிப்படுத்தவும், பாதுகாக்கவும் நீர் உறுதியளிக்க உம்மை கேட்கிறோம், ...

எங்கள் உள்ளங்கள் விண்ணகத்தை நாடச்செய்ய உம்மை கேட்கிறோம், …………

எங்கள் அருளாளர்கள் அனைவருக்கும் நித்திய ஆசீர்வாதங்களை நீர் வழங்குவதற்காக உம்மை கேட்கிறோம்,..

எங்களுடைய ஆன்மாக்களையும், எங்கள் சகோதரர்கள், உறவினர்கள் மற்றும் பயனாளிகளின் ஆன்மாக்களையும் நித்திய அழிவிலிருந்து விடுவிப்பதற்காக நாங்கள் உம்மை மன்றாடுகிறோம், …………

பூமி தன் கனிகளைக் கொடுப்பதற்கும், பாதுகாப்பதற்கும் நீர் உறுதியளிக்க உம்மை கேட்கிறோம், …………

மறைந்த அனைத்து விசுவாசிகளுக்கும் நித்திய இளைப்பாறுதலைக் கொடுக்க நீர் உறுதியளிக்க உம்மை கேட்கிறோம், ……..

எங்கள் மன்றாட்டுகளை கேட்பதாக நீர் கருணையுடன் உறுதியளிக்க உம்மை கேட்கிறோம், …………

இறைமகனே, உம்மை நோக்கி மன்றாடுகிறோம், எங்களுக்கு செவிசாய்த்தருளும்.

உலகின் பாவங்களைப் போக்கும் செம்மறிப்புருவையே, எங்களை காப்பாற்றியருளும் ஆண்டவரே.

உலகின் பாவங்களைப் போக்கும் செம்மறிப்புருவையே, எங்களுக்கு கருணையுடன் செவிசாய்த்தருளும் ஆண்டவரே.

உலகின் பாவங்களைப் போக்கும் செம்மறிப்புருவையே, எங்கள் மேல் இரக்கமாயிரும்.

கிறிஸ்துவே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

கிறிஸ்துவே, கிருபையுடன் எங்களுக்குச் செவிமடுத்தருளும்.

ஆண்டவரே, எங்களுக்கு கருணைக்காட்டும்.

கிறிஸ்துவே, எங்கள் மீது இரக்கமாயிரும்.

ஆண்டவரே, எங்கள் மீது கருணைக்காட்டும்.